**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564/2025 –** P.W.2

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. குடியரசன் | Father's Name. சிவராமன் |
| Village : செல்லூர் | Age: 29 |
| Date :18.02.2026 | தொழில் : கட்டிடம் இடிக்கும் வேலை |

நம்பர்: 9566676332

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of February 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of February 2026.**

Signature of Interpreter

**(எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது செல்லூரியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிடம் இடிக்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 26.10.2020 அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் செல்லூர், பைபாஸ் சாலையில் உள்ள வேகத்தடையின் அருகே என்னுடைய இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, முகம்மது சையது அலி என்பவர் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மொத்தம் நான்கு நபர்களுடன் நாகூரில் இருந்து புத்தூர் சாலையில் வந்து கொண்டிருந்தார்.

அப்போது அவர்களுக்கு எதிரே சுமோ ஒன்று வந்தது. அந்த சுமோ காரானது தனக்கு முன்னால் சென்ற மிதிவண்டி ஒன்றை முந்திக்கொண்டு ராங்க் சைட்டில் வந்து, மேற்படி முகம்மது சையது அலி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அவ்வாறு மோதியதில் மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்து நான்கு நபர்களுக்கும் பலத்த காயமுற்றது. அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஏற்றிக்கொண்டு நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தேன்.

அங்கு இருந்த மருத்துவர் முகம்மது சையது அலியும், அவரது இளையமகன் ஹியத்துல்லாவும் இறந்துவிட்டதாக சொன்னார். முகம்மது சையது அலியின் மனைவிக்கு இடுப்பு, இடதுபக்க கண் புருவம், இடதுபக்க தலை, கால் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரது பெரிய மகனுக்கும் பலத்த அடிப்பட்டு இருந்தது. இறந்தவர்களை பிணவறைக்கு கொண்டு சென்று வைத்துவிட்டோம். அவர்கள் மீது மோதிய சுமோவின் பதிவு எண். TN 51 Z 7076. அந்த காரை ஓட்டியவர் யார் என்று நான் பார்க்கவில்லை. முகம்மது சையது அலி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 50 H 3352 என்ற டிஸ்கவரி இருசக்கர வாகனம். போலீசார் என்னை இது சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

நான் முதல்விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் ? ஆமாம். விபத்து சமயத்தில், விபத்து நடந்த இடத்திலேயே நான் இல்லை என்றும், என்னை கண்ணுற்ற சாட்சியாக வழக்கினை போலீசார் ஜோடனை செய்து, அதற்கு ஆதவராக

சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் நான் விபத்தினை கண்ணுற்றது போலவும், வாகனங்களின் பதிவு எண்ணையும் தற்போது சாட்சியமாக அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.02.18 17:18:48 +0530